1986 நவம்பர் 19]

நிலை இருக்கிறது. எனவே தேவைகள் அனைத்தையும் ஒரே சமயத்தில், சைமல்டேனியஸ்லி, ஒரே செயற்குறிப்பில் எழுதி அனுப்பினால், அனைவரையும் நியமிக்க வாய்ப்பு ஏற்படும் அப்படிப்பட்ட நிலை ஏற்படும்போது பணியில் சுணக்கம் ஏற்படாது,

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசுப் பணியாளர்களை நியமிப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரை நியமிக்கப்படவில்லை. விரைவில் நியமிக்கப்படுவாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கவனிக்க வேண்டிய ஒன்று, தலைமைச் செயலாளர் மூலமாக விரைவிலே செய்யப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் விரைவிலே நியமிக்கப்படுவார். அதற்கான செயற்குறிப்பு இருக்குமென்று கருதுகிறேன்.

புதிய கோயில்கள்

75—*வினா எண் 5801 திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டுப்பாடில்லாமல் புதிய கோயில்கள் தேவையற்ற இடங்களில் உருவாகுவது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை முறைப்படுத்த அரசு நடவடிக்கையாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். பொதுவிடங்களில் கோயில்களை கட்டுவதை கட்டுபடுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே எப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை, அரசு விதிக்க இருக்கிறது என்ற விவரத்தையும், அரசின் ஆய்வில் உள்ள கட்டுப்பாடுகள் குறித்த விவரங்கள் என்ன என்பதையும் அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது இடங்கள் அல்லது சர்ச்சைக்குரிய நிலங்களில் திடீரென்று இரவோடு இரவாக தோன்றும் மத வழிப்பாட்டுநிலையங்களைக் கட்டுவதை அகற்றுவதற்கான தனிச் சட்டம் இயற்றுவது குறித்து பரிசீலிக்கும்படி மத்திய அரசு மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இப்பொருள் பற்றிய 1954 ஆம்வருடத்திய ராஜஸ்தான் மாநிலச் சட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு புதிய சட்டத்தை இயற்றுபறும் வலியுறுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் பொது இடங்களில் கோயில் கட்டுவதை அகற்றுவதற்கான சட்டம் இயற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது,

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படி பொது இடங்களில் கோயில்கள் உருவான பிறகு அதை அகற்றுவது அல்லது அப்புறப்படுத்துவது என்பது ஒரு சமுதாயப் பிரச்சினையாக, இன்னும் சொல்லப்போனால் ஆன்மீகப் பிரச்சினையாக உரு எடுக்கிறது, அந்த நிலையில், சட்டம் இடம் கொடுத்தாலும், அவற்றை அகற்றுவதில் சிக்கல் ஏற்படுகிறது. இருந்தாலும்! கோவில்கள் என்பது அறநிலையத் துறை சம்பந்தப்பட்டது. ஆனால் இடங்களைப் பொறுத்தவரையில் உள்ளாட்சித் துறையின் கீழ் வருகிறது. எனவே புதிதாகக் கோவில்களைக் கட்டுகிறபோது அல்லது சிலைகளை நிறுவுகிறபோது சம்பந்தப்பட்ட அறநிலையத் துறையிடம் முன் அனுமதி பெற வேண்டுமென்ற நிலை பரிசீலனையில் உள்ள சட்டத்தில் இடம் பெறுமளவுக்கு பார்த்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்து, சட்டம் இயற்றுகின்றபோது கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது இடங்களில், ஊருக்கு உபத்திரவம் இல்லாத இடங்களில் ஊர் மக்கள் சேர்ந்து கோவில் கட்டுகின்றபோது நிலைமைகள் வேறு. ஆனால் அமைச்சரவர்கள் சொல்லும் நிலைமை, சட்டத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை இருக்கிறது என்பதாகும். நான் சொல்ல விரும்புவது, சட்டம் இருக்கிற இடத்திலேயே அதை அமுலாக்காமல், தவறு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். கோவை மாநகரம் போன்ற முனிசிபல் நகரங்களில் இதை ஒரு வியாபாரமாகக் கருதி, நடு ரோட்டில், 4 கற்களை வைத்து கோவில் என்று ஆரம்பிக்கிறார்கள். அந்த நிமிடத்திலேயே அதை ரிமூவ் பண்ண முனிசிபல் அதிகாரிகளுக்கு உரிமை இருக்கிறது. எந்தத் தடையையும் நடு ரோட்டில் உண்டாக்கக் கூடாது என்பது விதி. இன்றைக்கு அமுலில் இருக்கும் போக்குவரத்து விதிகளுக்கு உட்பட்டே அப்படிப்பட்ட நடவடிக்கைகளை தடுக்கலாம். இப்படி நடுத் தெருவில் கோவில்கள் கட்டுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1986 நவம்பர் 19]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற கோவில்களுக்கு மட்டும் அங்கீகாரம் அளித்து, புதிய கோவில்கள் தோன்றாமல் இருப்பதற்கு, புதிய இடங்களை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சட்டத்தில் இதற்கான வழி வகுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற அந்த உயரிய தத்துவத்தை உள்ளடக்கி, தற்சமயம் பிறந்ததே போதும், இனி பிறப்பதைத் தவிர்ப்போம் என்ற குடும்பக் கட்டுப்பாடு நிலையைப்போல், இன்றுள்ள கோவில்களைக் காப்பாற்றினாலே போதும் என்ற நிலைமையில், தேவையற்ற, முறையற்ற போக்குவரத்திற்கு கெடுதல் விளைவிக்கின்ற வகையில் உள்ளவைகளை ஒழுங்குபடுத்த, முறைப்படுத்த அரசியல் ஆன்மீகம் கலந்த ஒரு குழுவை அமைத்து அரசு சீர்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சொல்வன்மை மிக்க மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் இந்தப் பணியை மேற்கொண்டால், நல்ல பலன்களை விளைவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 94, 95 மாண்புமிகு ஆதித்திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க முன்னதாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் காட்டுநாயக்கர் வகுப்பினர்.

94—(*வினா எண் 3876)—திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் காட்டுநாயக்கர் என்ற வகுப்பினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதா ?

(ஆ) அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் என்னென்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ''காட்டுநாயக்கர்'' இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பழங்குடியினர் என்று இனச்சான்று வழங்கப்படுகிறது.

(ஆ) பழங்குடியினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் அனைத்தும் இவ்வினத்தாருக்கு அளிக்கப்படுகின்றன.